**<u>முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

<u>S.C. No. 56/2024</u>

**LW 1 (PW1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லூர்துசாமி | தொழில் | |
| த/பெ | சூசை | தேதி | 13.10.2025 |
| ஊர் | | வயது | |
| மாவட்டம்; | | | |

( 13.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

நான் தற்போது பாண்டி ரேட்வேஸ் ல் மேலாளராக பணி செய்து வருகிறேன் . நான் பொம்மையார் பாளையத்தைச் சேர்ந்தவர் . 02.12.2021 ம் தேதி இரவு 8 மணியளவில் ரெட்டியார்மில் அருகே மாதா கோவில் அருகில் ஆட்டோவில் பாண்டி ரோட்வேஸ் என்ற பேருந்து நேருக்கு நேராக ஆட்டோவில் மோதிவிட்டனர் . நான் பாண்டிச்சேரியில் உள்ள எனது அலுவலகத்தில் இருந்தேன் அந்த பேருந்தில் அன்றயை தேதியில் நடத்துனராக இருந்த பிரகாசம் என்பவர் எனக்கு தகவலை இரவு 10 மணியளவில் போன் வாயிலாக கூறினார். அன்றைய தினம் பேருந்தை ஐயப்பன் என்பவர் ஓட்டி சென்றார் உடனே நான் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எங்களது நிறுவனத்தின் பேருந்தின் கண்ணாடிகளை

உடைத்துவிட்டனர். விபத்தில் ஆட்டோ ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர் அவரது பெயர் எனக்கு தெரியாது . எங்களது பேருந்திற்கு சுமார் 50000 ரூபாய் சேதாரம் ஏற்பட்டது . என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அது **அ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பேருந்தின் கண்ணாடியை யார் உடைத்தனர் என்பது எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

(Sd/-M.S. Varalakshmi)

முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,

விழுப்புரம்

**முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

**S.C. No. 56/2024**

**LW 2 (PW2)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாசம் | தொழில் | |
| த/பெ | கிருஷ்ணமூர்த்தி | தேதி | 13.10.2025 |
| ஊர் | | வயது | |
| மாவட்டம்; | | | |

( 13.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் தற்போது கண்டமங்கலத்தில் நவமாள் மருதூர் என்ற ஊரில் வசித்து வருகிறேன் . நான் தற்போது ரிலையன்ஸ் நிறுவனத்தின் இயக்கப்படும் பேருந்தில் நடத்துனராக பணி செய்து வருகிறேன். நான் பாண்டி ரேட்வேஸ் என் நிறுவனத்தின் 2021 ம் வருடம் நடத்துனராக பணி செய்து வருகிறேன் . 02.12.2021 ம் தேதி இரவு 8.05 மணியளவில் பாண்டியில் இருந்து விழுப்புரம் வரும்போது சவிதா தியேட்டர் அருகில் பேரிகாட் தாண்டி வரும்போது ஆட்டோ ஓட்டி வந்தவர் நேராக வந்துவிட்டார் அவர் பேருந்தில் மோதி அங்கேயே இறந்துவிட்டார் . அதன் பிறகு நானும் ஓட்டுநரும் இறங்கி ஓடிவிட்டோம். அதன் பிறகு சம்பவம் பற்றி நான் எங்களது மேலாளருக்கு போன் செய்து கூறினேன் . சிலர் பேருந்தின் மீது கல் எறிய ஆரம்பித்தனர் உடனே நாங்கள் ஓடிவிட்டோம் . யார் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத வேண்டி அனுமதி வேண்டப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தில் ஆட்டோ ஓட்டுநர் அர்ஜுனன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்ததை தொடர்ந்து அதே பகுதியை சேர்ந்த அவரது உறவினர்கள் மற்றும்

நண்பர்கள் பேருந்தின் முன்பக்க கண்ணாடி, பின் பக்க கண்ணாடி வலது புறம் மற்றும் இடது புறம் உள்ள ஜன்னல் கண்ணாடிகளை கல்லாலும் தடியாலும் அடித்து நொறுக்கிவிட்டு பேருந்து உள்ளே சென்று பேருந்தில் பயணிகள் உட்காரும் சீட்டை கொளுத்திவிட்டனர் என்றும் அப்போது அதில் பயணம்செய்த நபர்கள் பயந்து கீழே ஓடினர் என்றும் பின்னர் எங்கள் மேலாளர் விசாரித்ததில் பேருந்தை உடைத்து சேதப்படுத்திய நபர்கள் பிரபு, புருஷோத், பச்சையப்பன், மோகன் மற்றும் சிலர் எனக்கு நடவடிக்கை எடுக் க வேண்டி புகார் கொடுத்தனர் அது தொடர்பாக போலிசார் என்னை விசாரணை செய்தனர் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதனை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

(Sd/-M.S. Varalakshmi)

முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,

விழுப்புரம்